உதவி அமர்வு நீதிமன்றம், திண்டுக்கல்.
(தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திண்டுக்கல்)
**முன்னிலை: – திருமதி. வா. தீபா, எம்.எல்.,**
உதவி அமர்வு நீதிபதி, திண்டுக்கல்.
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், திண்டுக்கல்.

2026–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 09–ம் நாள் வியாழக்கிழமை
**அமர்வு வழக்கு எண். 156/2024.**
C.N.R. No.TNDG03–077867–2024
(முதல்நிலை விசாரணை வழக்கு எண். 22/2024)

தமிழக அரசுக்காக,
காவல் ஆய்வாளர்,
சாணார்பட்டி காவல் நிலைய
குற்ற எண். 287/2023 ………… குற்றமுறையிடுபவர்.

/எதிர்/

1) முத்துமுருகேசன், வயது 29/2023
த/பெ. ராசு,
புதுக்காடு, குடுமியான்மலை அஞ்சல்,
புதுக்கோட்டை மாவட்டம்.

2) வடிவேல், வயது 42/2023
த/பெ. பழனிச்சாமி,
கம்பார்பட்டி, சிலுவத்தூர் அஞ்சல்,
அத்திக்கரைப்பட்டி, திண்டுக்கல் மாவட்டம்.

3) சுஜாதா, வயது 36/2023
க/பெ. சுப்பிரமணியன்,
முத்தம்பட்டி, பரம்பூர் அஞ்சல்,
திண்டுக்கல் மாவட்டம்.

4) சிவனேஸ்வரன், வயது 28/2023
த/பெ. பெருமாள்ராஜா,
கட்டபொம்மன் சிலை அருகில்,
சிலுவத்தூர், திண்டுக்கல் மாவட்டம்.

5) மனோஜ்குமார், வயது 28/2023
த/பெ. சின்னபெருமாள்,
மலைமேடு புதூர், தீத்தம்பட்டி,
சிலுவத்தூர், திண்டுக்கல் மாவட்டம்.

6) அருண்பாண்டி, வயது 29/2023
த/பெ. முருகேசன்,
பழனிமா நகர், சாணார்பட்டி,
திண்டுக்கல் மாவட்டம்.

7) ஆனந்த், வயது 34/2023
த/பெ. ராசு,
மஞ்சநாயக்கன்பட்டி, ராகலாபுரம்,
சாணார்பட்டி, திண்டுக்கல் மாவட்டம்.

8) ராபின் வயது 23/2023
த/பெ. தாமஸ் விக்டர்,
சிலுவத்தூர் அஞ்சல்,
அத்திக்கரைப்பட்டி, திண்டுக்கல் மாவட்டம். ........ எதிரிகள்.

எதிரிகள் மீதான குற்றம் : இவ்வழக்கின் வாதியான வேலுமணி என்பவர் திருச்சி மாவட்டம், துவரங்குறிச்சியில் உள்ள பொன்னம்பட்டி பேரூராட்சியில் 12வது வார்டு கவுன்சிலராகவும், தி.மு.கவில் இளைஞர் அணி அமைப்பாளராகவும் உள்ளார். புதுக்கோட்டை மாவட்டம் இலுப்பூர் தாலுகா பகுதியில் மணல் குவாரிகளில் மணல் எடுத்து வியாபாரம் செய்தும், சமுதாயத்தில் பெரிய பெயர் வாங்க வேண்டும் என்ற எண்ணத்தில், கட்டப் பஞ்சாயத்து செய்து கொண்டு வந்த இவ்வழக்கின் 1வது எதிரியான முத்துமுருகேசன் என்பவருடன் பழக்கம் ஏற்படுத்திக் கொண்டுள்ளார். ஏற்கனவே பல காவல் நிலையங்களில் அடிதடி வழக்கு, ஆள் கடத்தல் மற்றும் கூட்டுக் கொள்ளை வழக்குகளில் சம்பந்தப்பட்டு அவ்வாறான குற்ற சம்பவங்களில் ஈடுபடுவதை தொழிலாக வைத்திருந்த 2வது எதிரி பெண்களை மற்ற நபர்களிடம் ஆசை வார்த்தைகள் கூறி பேச வைத்து அவர்களிடம் பணம் பறித்து வந்துள்ளார். அவ்வாறு 1வது

எதிரியுடன் சேர்ந்து ஏதாவது குறுக்கு வழியில் பணம் சம்பாதிக்கலாம் என திட்டமிட்டு 1வது எதிரிக்கு தெரிந்த துவரங்குறிச்சியைச் சேர்ந்த கவுன்சிலரான வாதியிடம் பெண் ஆசை காட்டி பணம் பறிக்கலாம் என இருவரும் திட்டமிட்டு அதன் படி 1வது எதிரிக்கு தெரிந்த 3வது எதிரி சுஜாதா என்பவர் மூலம் வாதியிடம் பெண் ஆசை காட்டியும், ஆசை வார்த்தைகள் கூறியும், போன் மூலமாக பேச வைத்துள்ளார். 3வது எதிரி, வாதியுடன் அவரது வாட்ஸ் ஆப் எண் மற்றும் கைபேசி எண் மூலம் ஆசை வார்த்தைகள் கூறி பேசி வந்துள்ளார். மேலும், 2வது எதிரி சம்பவ இடத்திற்கு கிழக்கு பக்கம் உள்ள ஒரு பூட்டிய வீட்டை போட்டோ எடுத்து 3வது எதிரிக்கு அனுப்பியும், அதை வாதிக்கு 3வது எதிரி அனுப்பி வைத்தும், மேற்படி தனியாக இருக்கும் அந்த வீட்டிற்கு வந்தால் உல்லாசமாக இருக்கலாம் என்று ஆசை வார்த்தைகள் கூறி 1வது, 2வது எதிரிகளின் திட்டப்படி வாதியை சம்பவ இடத்திற்கு வர வைத்துள்ளார்கள். அதன்படி கடந்த 17.08.2023-ம் தேதி 21.00 மணிக்கு வாதியும், அவரது உறவினர் செல்லப் பாண்டியும் வாதிக்கு சொந்தமான TN 67 B 2394 Santro என்ற பதிவெண் கொண்ட காரில் சம்பவ இடத்திற்கு வந்தபோது, ஏற்கனவே அங்கு தயாராக இருந்த 4வது எதிரிக்குச் சொந்தமான TN 57 BE 775 Bajaj Pulsur என்ற வாகனத்திலும், 2வது எதிரி ஓட்டி வந்த TN 20 CA 1337 Pulsur என்ற பதிவெண் கொண்ட வாகனமும், சட்டத்திற்கு முரணான இளஞ்சிறார் சிபி (எ) அந்தோணி என்பவர் அதிகாரிப்பட்டியில் நிறுத்தப்பட்டு இருந்த இருசக்கர வாகனம் என மூன்று இருசக்கர வாகனங்களுடன் மறைந்திருந்த 2வது எதிரி வடிவேல் மற்றும் அவரது கூட்டாளிகளான 4, 5, 6, 7, 8 ஆகிய எதிரிகள் மற்றும் சட்டத்திற்கு முரணான இளஞ்சிறார் ஆகியோர் வாதி மற்றும் அவருடன் வந்திருந்த வாதியின் உறவினரான செல்லப்பாண்டி என்பவரும் வந்திருந்த காரின்

அருகே சென்று அவர்களில் 2, 4, 7, 5 எதிரிகள் காருக்குள் ஏறி 4, 5 எதிரிகள் இடுப்பில் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து வாதியின் கழுத்தில் வைத்து சத்தம் போட்டால் கொன்று விடுவோம் என மிரட்டியும், 2வது எதிரி வாதியின் சட்டைப் பாக்கெட்டில் இருந்து Vivo செல்போன் மற்றும் பணம் ரூ.15,000/– ஆகியவற்றை பறித்துக் கொண்டும், 7வது எதிரி செல்லப்பாண்டியின் பாக்கெட்டில் இருந்த Vivo செல்போன் மற்றும் பணம் ரூ.500/– ஆகியவற்றை பறித்துக் கொண்டுள்ளார். எதிரிகள் தங்களிடம் வழிப்பறி செய்வதை தெரிந்து கொண்டு அவர்களை தடுக்க முயன்ற வாதியை 5வது எதிரி கத்தியால் குத்தியபோது, வாதிக்கு வலது உள்ளங்கையில் இரத்தக் காயம் ஏற்பட்டுள்ளது. பின்பு வாதியையும், செல்லப் பாண்டியையும் அவர்கள் வந்த காரிலேயே ஏற்றிக் கொண்டு 4வது எதிரி காரை ஓட்டிக் கொண்டு காம்பார்பட்டிக்கு கிழக்கு பக்கம் உள்ள ஒரு இருட்டான மாந்தோப்பிற்குள் கூட்டிச் சென்றுள்ளார்கள். மற்ற எதிரிகளான 6, 8வது எதிரிகள் இருசக்கர வாகனத்திலும், சட்டத்திற்கு முரணான இளஞ்சிறார் அவர் எடுத்து வந்த இருசக்கர வாகனத்தை அவர் எடுத்த இடத்திலேயே வைத்துவிட்டு எதிரிகள் வாதியை வைத்திருந்த இடத்திற்கு சென்றுள்ளார்கள். பின்பு அந்த இருட்டான பகுதியில் வைத்து வாதியை அனைவரும் கையால் அறைந்தும், கத்தியை காண்பித்து ஒழுங்கு மரியாதையாக உனக்கு தெரிந்தவர்களிடம் பணம் கொண்டு வரச் சொல். இல்லை என்றால் உங்களை இங்கேயே கொன்று விடுவோம் என கொலை மிரட்டல் விடுத்துள்ளார்கள். மேற்படி குற்ற செய்கைக்காக 1 முதல் 8 எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 392, 397, 323, 506(2), 120(பி), உ/இ. 34–ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளார்கள் என குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| எதிரிகள் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டுக்கள் : | எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 392, 397, 323, 506(2), 120(பி), உ/இ. 34–ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டுள்ளது. |
| எதிரிகளின் வாதுரை : | குற்றவாளிகள் இல்லை |
| நீதிமன்றத்தின் முடிவு : | குற்றவாளிகள் இல்லை. |
| தீர்ப்பு : | அரசு தரப்பில் 1 முதல் 8 எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 392, 397, 323, 506(2), 120(பி), உ/இ. 34–ன் கீழான குற்றச்சாட்டுக்கள் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் ஐயத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என தீர்மானித்து, சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி, எதிரிகளை மேற்படி பிரிவுகளின் கீழான குற்றச் சாட்டுக்களுக்கு குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து, எதிரிகளை பிரிவு கு.வி.மு.ச பிரிவு 235(1)–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. |

இந்த வழக்கில், இந்நீதிமன்ற R.P.R. No. 07/2026–ல் கைப்பற்றப்பட்ட சா.பொ.2 சுமார் 34 செ.மீ. நீளமுள்ள மரக்கைபிடி மற்றும் இரும்பு பூனுடன் கூடிய சூரிக்கத்தி ஒன்று, சா.பொ.6 சுமார் 30.8 செ.மீ நீளமுள்ள மரக்கைப்பிடியுடன் கூடிய கத்தி ஒன்று ஆகியவற்றை மேல்முறையீட்டு காலத்திற்குப் பின்னர் அழிக்க உத்தரவிடப்படுகிறது.

சா.பொ.3 லைட் புளூ கலர் Vivo cell phone ஒன்று, சா.பொ.4 ஆரஞ்சு நிற Vivo Cell phone ஒன்று, சா.பொ.7 லைட் புளூ கலர் Redmi செல்போன் ஒன்று மற்றும் குறியீடு செய்யப்படாத வெளிர் பச்சைக் கலர் Samsung செல்போன் ஒன்று ஆகியவற்றை அதன் உரிமையாளர் மேல் முறையீட்டு காலத்திற்குப் பின்னர் நீதிமன்றத்தில்

உரிய மனு தாக்கல் செய்து பெற்றுக் கொள்ளலாம் என்றும் உத்தரவிடப்படுகிறது. சா.பொ.1 மற்றும் சா.பொ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள இருசக்கர வாகனங்களின் புகைப்படங்களை வழக்கு கோப்பில் வைக்க உத்தரவிடப்படுகிறது.

இவ்வழக்கில் கைப்பற்றப்பட்டு சாணார்பட்டி காவல்நிலைய பொறுப்பில் வைக்கப்பட்டுள்ள TN 57 BE 7755 Bajaj Pulsar இருசக்கர வாகனம், TN 20 CA 1337 Pulsar என்ற இருசக்கர வாகனம் ஆகியவற்றை அதன் உரிமையாளர் மேல் முறையீட்டு காலத்திற்குப் பின்னர் நீதிமன்றத்தில் உரிய மனு தாக்கல் செய்து பெற்றுக் கொள்ளலாம் என்றும் உத்தரவிடப்படுகிறது.

இந்த வழக்கு என் முன்பாக 09.04.2026-ம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, அரசு தரப்பில் திரு. M. விஜயேந்திரன் கூடுதல் அரசு வழக்கறிஞர் அவர்களும், A1, A2, A5, A6 எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. V. காளிதாஸ் அவர்களும், A3 எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு. T. பாலாஜி அவர்களும், A4 எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு. A.K. தேவா அவர்களும் A7, A8 எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர்கள் திருவாளர்கள். P.ராமச்சந்திரன் மற்றும் M. முத்துக்குமார் அவர்களும் முன்னிலையாகி வாதிட்டதைக் கேட்ட பின்னர், இந்த வழக்கில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்து, இதுநாள் வரையில் இந்த நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து, இறுதியாக 09.04.2026-ம் தேதி அன்று விசாரணைக்கு வந்து, இருதரப்பு வாதுரைகளை கேட்டறிந்த பின்னர், இன்று இந்த நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கிடும்

**தீர்ப்புரை**

1. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் :–

இவ்வழக்கின் வாதியான வேலுமணி என்பவர் திருச்சி மாவட்டம், துவரங்குறிச்சியில் உள்ள பொன்னம்பட்டி பேரூராட்சியில் 12வது வார்டு கவுன்சிலராகவும், தி.மு.கவில் இளைஞர் அணி அமைப்பாளராகவும் உள்ளார். புதுக்கோட்டை மாவட்டம் இலுப்பூர் தாலுகா பகுதியில் மணல் குவாரிகளில் மணல் எடுத்து வியாபாரம் செய்தும், சமுதாயத்தில் பெரிய பெயர் வாங்க வேண்டும் என்ற எண்ணத்தில், கட்டப் பஞ்சாயத்து செய்து கொண்டு வந்த இவ்வழக்கின் 1வது எதிரியான முத்துமுருகேசன் என்பவருடன் பழக்கம் ஏற்படுத்திக் கொண்டுள்ளார். ஏற்கனவே பல காவல் நிலையங்களில் அடிதடி வழக்கு, ஆள் கடத்தல் மற்றும் கூட்டுக் கொள்ளை வழக்குகளில் சம்பந்தப்பட்டு அவ்வாறான குற்ற சம்பவங்களில் ஈடுபடுவதை தொழிலாக வைத்திருந்த 2வது எதிரி பெண்களை மற்ற நபர்களிடம் ஆசை வார்த்தைகள் கூறி பேச வைத்து அவர்களிடம் பணம் பறித்து வந்துள்ளார். அவ்வாறு 1வது எதிரியுடன் சேர்ந்து ஏதாவது குறுக்கு வழியில் பணம் சம்பாதிக்கலாம் என திட்டமிட்டு 1வது எதிரிக்கு தெரிந்த துவரங்குறிச்சியைச் சேர்ந்த கவுன்சிலரான வாதியிடம் பெண் ஆசை காட்டி பணம் பறிக்கலாம் என இருவரும் திட்டமிட்டு அதன் படி 1வது எதிரிக்கு தெரிந்த 3வது எதிரி, வாதியுடன் அவரது வாட்ஸ் ஆப் எண் மற்றும் கைபேசி எண் மூலம் ஆசை வார்த்தைகள் கூறி பேசி வந்துள்ளார். மேலும், 2வது எதிரி சம்பவ இடத்திற்கு கிழக்கு பக்கம் உள்ள ஒரு பூட்டிய வீட்டை போட்டோ எடுத்து 3வது எதிரிக்கு அனுப்பியும், அதை வாதிக்கு 3வது எதிரி அனுப்பி வைத்தும், மேற்படி தனியாக இருக்கும் அந்த வீட்டிற்கு வந்தால் உல்லாசமாக இருக்கலாம் என்று ஆசை வார்த்தைகள் கூறி 1வது, 2வது எதிரிகளின் திட்டப்படி வாதியை சம்பவ இடத்திற்கு வர வைத்துள்ளார்கள். அதன்படி கடந்த 17.08.2023–ம் தேதி 21.00 மணிக்கு வாதியும், அவரது உறவினர் செல்லப் பாண்டியும் வாதிக்கு சொந்தமான TN 67 B 2394 Santro என்ற பதிவெண் கொண்ட காரில் சம்பவ

இடத்திற்கு வந்தபோது, ஏற்கனவே அங்கு தயாராக இருந்த 4வது எதிரிக்குச் சொந்தமான TN 57 BE 775 Bajaj Pulsur என்ற வாகனத்திலும், 2வது எதிரி ஓட்டி வந்த TN 20 CA 1337 Pulsur என்ற பதிவெண் கொண்ட வாகனமும், சட்டத்திற்கு முரணான இளஞ்சிறார் சிபி (எ) அந்தோணி என்பவர் அதிகாரிப்பட்டியில் நிறுத்தப்பட்டு இருந்த இருசக்கர வாகனம் என மூன்று இருசக்கர வாகனங்களுடன் மறைந்திருந்த 2வது எதிரி வடிவேல் மற்றும் அவரது கூட்டாளிகளான 4, 5, 6, 7, 8 ஆகிய எதிரிகள் மற்றும் சட்டத்திற்கு முரணான இளஞ்சிறார் ஆகியோர் வாதி மற்றும் அவருடன் வந்திருந்த வாதியின் உறவினரான செல்லப்பாண்டி என்பவரும் வந்திருந்த காரின் அருகே சென்று அவர்களில் 2, 4, 7, 5 எதிரிகள் காருக்குள் ஏறி 4, 5 எதிரிகள் இடுப்பில் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து வாதியின் கழுத்தில் வைத்து சத்தம் போட்டால் கொன்று விடுவோம் என மிரட்டியும், 2வது எதிரி வாதியின் சட்டைப் பாக்கெட்டில் இருந்து Vivo செல்போன் மற்றும் பணம் ரூ.15,000/− ஆகியவற்றை பறித்துக் கொண்டும், 7வது எதிரி செல்லப்பாண்டியின் பாக்கெட்டில் இருந்த Vivo செல்போன் மற்றும் பணம் ரூ.500/− ஆகியவற்றை பறித்துக் கொண்டுள்ளார். எதிரிகள் தங்களிடம் வழிப்பறி செய்வதை தெரிந்து கொண்டு அவர்களை தடுக்க முயன்ற வாதியை 5வது எதிரி கத்தியால் குத்தியபோது, வாதிக்கு வலது உள்ளங்கையில் இரத்தக் காயம் ஏற்பட்டுள்ளது. பின்பு வாதியையும், செல்லப் பாண்டியையும் அவர்கள் வந்த காரிலேயே ஏற்றிக் கொண்டு 4வது எதிரி காரை ஓட்டிக் கொண்டு காம்பார்பட்டிக்கு கிழக்கு பக்கம் உள்ள ஒரு இருட்டான மாந்தோப்பிற்குள் கூட்டிச் சென்றுள்ளார்கள். மற்ற எதிரிகளான 6, 8வது எதிரிகள் இருசக்கர வாகனத்திலும், சட்டத்திற்கு முரணான இளஞ்சிறார் அவர் எடுத்து வந்த இருசக்கர வாகனத்தை அவர் எடுத்த இடத்திலேயே வைத்துவிட்டு எதிரிகள் வாதியை வைத்திருந்த இடத்திற்கு சென்றுள்ளார்கள். பின்பு அந்த இருட்டான பகுதியில் வைத்து வாதியை அனைவரும் கையால் அறைந்தும், கத்தியை காண்பித்து ஒழுங்கு மரியாதையாக

உனக்கு தெரிந்தவர்களிடம் பணம் கொண்டு வரச் சொல். இல்லை என்றால் உங்களை இங்கேயே கொன்று விடுவோம் என கொலை மிரட்டல் விடுத்துள்ளார்கள். மேற்படி குற்ற செய்கைக்காக 1 முதல் 8 எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 392, 397, 323, 506(2), 120(பி), உ/இ. 34–ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளார் என சாணார்பட்டி காவல் நிலைய ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. மேற்படி குற்ற அறிக்கையை பரிசீலனை செய்து, முடிவில் இவ்வழக்கானது திண்டுக்கல், குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.3 நீதிமன்றத்தில் PRC 22/2024 ஆக 28.03.2024–ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இவ்வழக்கின் எதிரிகள் திண்டுக்கல், குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.3 நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் எதிரிகளுக்கு இவ்வழக்கில் ஆவணங்கள் அனைத்தும் கு.வி.மு.ச. 207 பிரிவின் கீழ் இலவசமாக வழங்கி பின்னர் இவ்வழக்கின் ஆவணங்களை பரிசீலனை செய்து, எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச் சாட்டுக்களானது அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரிக்கத்தக்க குற்றச் சாட்டுக்கள் என்பதால், முதல் நிலை பதிவு வழக்கினை திண்டுக்கல், முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றத்தில் குவிமுச பிரிவு 209(அ)ன் கீழ் விசாரணைக்காக சமர்ப்பித்துள்ளார்.

3. திண்டுக்கல், முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றத்தில் இவ்வழக்கானது 16.10.2024–ம் தேதியன்று அமர்வு வழக்கு எண். 156/2024 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, மேல் விசாரணைக்காக இந்நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. இந்நீதிமன்றத்தில் எதிரிகள் ஆஜரானபோது, இருதரப்பினைக் கேட்டும், அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை பரிசீலனை செய்தும், எதிரிகள் இறுதி அறிக்கையில் கண்டுள்ள குற்றத்தினை புரிந்திருக்கக் கூடும் என்று அனுமானிக்க போதிய ஆதாரங்கள்

இருந்ததால், எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 120(பி), 392, 397, 323, 506(2) உ/இ. 34–ன் கீழ் எழுத்து மூலமான குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டு தமிழில் விளக்கி கூறி வினவியபோது, எதிரிகள் தாங்கள் குற்றவாளிகள் இல்லை என்று மறுத்தார்கள். எதிரிகள் குற்றத்தினை மறுத்த காரணத்தினால், இவ்வழக்கு அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்காக ஒத்தி வைக்கப்பட்டது.

4. அதன் பேரில் அரசுத் தரப்பு வழக்கை நிரூபிக்கும் வகையில், அரசுத் தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.21 வரையிலான சான்றாவணங்களும், சான்று பொருளாக சா.பொ.1 முதல் சா.பொ.7 வரையிலான சான்று பொருட்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிரிகள் தரப்பில் சாட்சிகள் இல்லை மற்றும் சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

5. <u>அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம் பின்வருமாறு :–</u>

I) இந்த வழக்கில் அ.சா.1 வேலுமணி என்பவர் தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரிகளைத் தெரியாது என்றும், புகார் மனுவிலுள்ள கைரேகை தன்னுடையது தான் என்று ஒப்புக் கொண்டுள்ளார். அதை சாணார்பட்டி காவல் நிலையத்தில் வைத்து செய்ததாகவும் கூறியுள்ளார். 17.08.2023–ம் தேதி இரவு சுமார் 10.00 மணிக்கு மேல் தனக்கு அலைபேசி மூலமாக ஒரு அழைப்பு வந்ததாகவும், ஒரு பெண்மணி தங்களை விருந்திற்கு அதிகாரிப்பட்டிக்கு வரச்சொல்லி அழைப்பு வந்ததாகவும், அன்று சேர்மேனுக்கு பிறந்தநாள் என்பதால், தெரிந்தவர்கள்தான் விருந்திற்கு அழைக்கிறார்கள் என்று கருதி, தானும், தனது உறவினர் செல்லப்பாண்டியும் போனபோது, இயற்கை உபாதைக்காக சிலுவத்தூருக்கு முன்பாக ஒரு வீட்டின் அருகே காரை நிறுத்திவிட்டு இறங்கியபோது, அங்கு சுமார் 7, 8 பேர் பைக்கில் திடுதிடுவென்று வந்து, கத்தியைக் காட்டி மிரட்டி

பக்கத்தில் இருந்த மாந்தோப்பிற்கு அழைத்துச் சென்றார்கள் என்றும், தங்களிடம் இருந்த பணம், செல்போன் ஆகியவற்றை எடுத்துக் கொண்டு, தங்கள் இருவரையும் பிரித்து வெவ்வேறு இடங்களுக்கு கொண்டு சென்றார்கள் என்றும், தன்னை மிரட்டிக் கொண்டு இருந்த நபரிடம் இருந்த கத்தியை தான் பிடுங்கி அருகில் இருந்த ஊருக்குள் ஓடிவிட்டதாகவும் கூறியுள்ளார். மேலும், அங்கிருந்தவர்களை அழைத்துக் கொண்டு தங்களை மிரட்டிய நபர்களைத் தேடிப்பார்த்தும் கிடைக்காததால் 100-க்கு போன் செய்து, போலீஸை வரச்சொல்லி, நடந்த சம்பவத்தைச் சொன்னதாக கூறியுள்ளார். தனது உறவினர் செல்லப்பாண்டியை பணம் வாங்கி வரச்சொல்லி அனுப்பி வைத்துள்ளனர் என்றும், தங்களை கடத்திய நபர்களை தங்களுக்கு அடையாளம் தெரியாததால் புகார் கொடுக்கலாமா வேண்டாமா என்று குழப்பத்தில் இருந்துவிட்டு, ஒரு வாரம் கழித்து காவல் நிலைத்தில் புகார் கொடுத்ததாகவும், புகார் மனுவில் போலீசார் எழுதிக் கொண்டனர் என்றும், அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று தனக்குத் தெரியாது என்றும், தன்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள நீலநிற செல்போன், மற்றொரு செல்போன் தனது உறவினர் செல்லப்பாண்டி என்பவருடையது என்றும், தங்களை பணம் கேட்டு மிரட்டிய நபர்கள் முகமூடி எதுவும் அணியவில்லை என்றும், இருட்டாக இருந்ததால் அவர்களை சரியாக அடையாளம் தெரியவில்லை என்றும் கூறியுள்ளார். அ.சா.2 செல்லப்பாண்டி என்பவர், அ.சா.1ன் சாட்சியத்தை அனுசரித்து சாட்சியமளித்துள்ளார்.

ii) அ.சா.3 பிரபாகரன், காவல் ஆய்வாளர் தனது சாட்சியத்தில், தங்கள் காவல் நிலையத்தில் பணிபுரிந்த உதவி ஆய்வாளர் திரு. ராஜேந்திரன், காவல் ஆய்வாளர் திரு. தங்க முனியசாமி ஆகியோர் தற்போது வேறு மாவட்டத்தில் பணிபுரிந்து வருவதால், அவர்களுடைய கையெழுத்து மற்றும் கையொப்பங்கள் தனக்கு நன்கு பரிட்சியம் என்பதால், அ.சா.1 மற்றும் அ.சா.2 எதிரிகள் வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டதாக சாட்சியம் அளிக்காததாலும், வழக்கின் காலதாமத்தை

தவிர்க்கும் பொருட்டும் வழக்கு ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிப்பதாகவும் கூறியுள்ளார். உதவி ஆய்வாளர் திரு. ராஜேந்திரன் அவர்கள் 24.08.2023ம் தேதி 14.15 மணிக்கு சாணார்பட்டி காவல் நிலைய பொறுப்பில் இருந்தபோது, துவரங்குறிச்சியைச் சேர்ந்த சண்முகம் மகன் வேலுமணி என்பவர் நிலையம் ஆஜராகிக் கொடுத்த எழுத்து மூலமான அ.சா.ஆ.3 புகார் மனுவைப் பெற்று நிலையக் குற்ற எண். 287/2023, சட்டப்பிரிவுகள் 392, 397, 323, 506(ii) இ.த.ச.வின் படி அ.சா.ஆ.4 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் என்றும், உதவி ஆய்வாளர் அவர்கள் மேற்படி வழக்கு கோப்பை மேல் விசாரணைக்காக ஆய்வாளர் வசம் ஒப்படைத்துள்ளார் என்றும், ஆய்வாளர் அவர்கள் வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்டு 24.08.2023ம் தேதி சம்பவ இடம் சென்று சாட்சிகள் ஜேம்ஸ் மற்றும் அந்தோணி குரூஸ் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு, அ.சா.ஆ.5 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.6 மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார் என்றும், இவ்வழக்கு சாட்சிகளை தனித் தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

iii) மேலும், 24.08.2023ம் தேதி மாலை 18.00 மணிக்கு ஆய்வாளர் அவர்கள் சிலுவத்தூர், காம்பார்பட்டி, அதிகாரிபட்டி ஆகிய இடங்களில் எதிரிகளைத் தேடியபோது, பண்ணைப்பட்டி பிரிவு அருகே வாகன சோதனை செய்தபோது, TN 57 BE 7755 பதிவு எண் கொண்ட பஜாஜ் பல்சர் இருசக்கர வாகனத்தில் வந்த எதிரி சிவனேசன் என்பவரை பிடித்து விசாரித்தபோது, அவர் இவ்வழக்கு குற்ற சம்பவத்தில் ஈடுபட்டதாக கூறியவரை காரணம் கூறி கைது செய்து விசாரித்தபோது, சாட்சிகள் அருண்குமார் மற்றும் பூமிநாதன் ஆகியோர் முன்னிலையில் அவர் எவ்வித வற்புறுத்தலும், தூண்டுதலும் இன்றி தன்னிச்சையாக ஓர் ஒப்புதல் வாக்குமூலம் அளித்ததன் அடிப்படையில், அன்றைய தினமே 19.15 மணிக்கு அதே இடத்தில் வைத்து, அதே சாட்சிகள்

முன்னிலையில் TN 57 BE 7755 பதிவு எண் கொண்ட பஜாஜ் பல்சர் இருசக்கர வாகனத்தையும், சுமார் 34 செ.மீ. நீளமுள்ள கத்தி – 1 யையும் அ.சா.ஆ.8 கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றியதாகவும், TN 57 BE 7755 பதிவு எண் கொண்ட பஜாஜ் பல்சர் இருசக்கர வாகனத்தின் 4 எண்ணிக்கை கொண்ட புகைப்படங்களின் வரிசை சா.பொ. 1 மற்றும் மரக்கைப்பிடியுடன் கூடிய கத்தி சா.பொ. 2 என்றும், பின்னர் 07.10.2023ம் தேதி ஆய்வாளருக்கு கிடைத்த தகவலின்பேரில் எதிரி வடிவேலு என்பவரை விராலிபட்டி பிரிவு அருகே காலை 08.00 மணிக்கு காரணம் கூறி கைது செய்து, சாட்சிகள் ஆறுமுகம் மற்றும் தங்கச்சாமி ஆகியோர் முன்னிலையில் எவ்வித வற்புறுத்தலும், தூண்டுதலும் இன்றி தன்னிச்சையாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில், அன்றைய தினமே காலை 10.00 மணிக்கு வங்கமனூத்து எதிரி ராபின் வீட்டின் பின்புறம் மறைத்து வைத்திருந்த blue color vivo செல்போன் ஒன்றையும், ஆரஞ்சு நிற செல்போன் ஒன்றையும் அதே சாட்சிகள் முன்னிலையில் எடுத்து ஆஜர் செய்ததை அ.சா.ஆ.10 கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றியுள்ளார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

iv) ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சிகளான ஆறுமுகம், தங்கச்சாமி ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து, எதிரியை தக்க வழிக்காவல் மூலமாக நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார் என்றும், மேற்படி blue color vivo செல்போன் சா.பொ.3 மற்றும் ஆரஞ்சு நிற செல்போன் சா.பொ.4 என்றும், பின்னர் 01.12.2023ம் தேதி இவ்வழக்கின் தலைமறைவு எதிரிகளைத் தேடி வந்தபோது கிடைத்த தகவலின்பேரில் ஆய்வாளர் அவர்கள் அன்றைய தினம் காலை 05.00 மணிக்கு RMTC பேருந்து நிறுத்தம் அருகே TN 20 CA 1337 பதிவு எண் கொண்ட பல்சர் இருசக்கர வாகனத்தில் வந்த நபரை பிடித்து விசாரித்தபோது, அவர் மனோஜ்குமார் என்றும், அவர் இவ்வழக்கு குற்ற சம்பவத்தில் ஈடுபட்டதாக

கூறியவரை காரணம் கூறி கைது செய்து விசாரித்தபோது, அவர் சாட்சிகள் லூயிஸ் அந்தோனி பீட்டர் மற்றும் அந்தோனி ஆரோக்கியசாமி ஆகியோர் முன்னிலையில் எவ்வித வற்புறுத்தலும், தூண்டுதலும் இன்றி தன்னிச்சையாக ஓர் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததன் அடிப்படையில், அன்றைய தினமே காலை 06.00மணிக்கு RMTC பேருந்து நிறுத்தம் அருகே எதிரி ஆஜர் செய்த இருசக்கர வாகனத்தையும், கத்தியையும் அ.சா.ஆ.12 கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றியுள்ளார் என்றும், TN 20 CA 1337 இருசக்கர வாகனத்தின் மூன்று புகைப்படங்களின் வரிசை சா.பொ. 5 மற்றும் கத்தி சா.பொ. 6 என்றும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சிகளான லூயிஸ் அந்தோனி பீட்டர் மற்றும் அந்தோனி ஆரோக்கியசாமி ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

v) பின்னர் 06.12.2023ம் தேதி இவ்வழக்கின் தலைமறைவு எதிரிகளை தேடி வந்தபோது கிடைத்த தகவலின்பேரில் ஆய்வாளர் அவர்கள் அன்றைய தினம் காலை 06.30 மணிக்கு செல்போன் டவர் லோகேசன் அருகே இவ்வழக்கின் எதிரி சுஜாதா என்பவரை முத்தம்பட்டியில் வைத்து காரணம் கூறி கைது செய்து விசாரித்தபோது, அவர் சாட்சிகள் வேல்முருகன் மற்றும் மணிகண்டன் ஆகியோர் முன்னிலையில் எவ்வித வற்புறுத்தலும், தூண்டுதலும் இன்றி தன்னிச்சையாக ஓர் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததன் அடிப்படையில், அன்றைய தினமே காலை 11.30 மணிக்கு சாணார்பட்டி காவல்நிலையத்தில் வைத்து பச்சை கலர் Redme செல்போன் ஒன்றை சாட்சிகள் முன்னிலையில் எதிரி ஆஜர் செய்ய அ.சா.ஆ.14 கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றியுள்ளார் என்றும், Redme செல்போன் சா.பொ.7 என்றும், ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சிகளான வேல்முருகன் மற்றும் மணிகண்டன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும்,

எதிரியை தக்க வழிக்காவல் மூலமாக நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியும், இவ்வழக்கின் 7–ம் எதிரி ஆனந்த் என்பவரை 25.08.2023ம் தேதி 14.30 மணிக்கு பண்ணைப்பட்டி, சந்தனவர்த்தினி ஆற்றின் மேற்கு கரையில் வைத்து கைது செய்தும், எதிரி அருண்பாண்டி என்பவரை 10.09.2023ம் தேதி காலை 09.00 மணிக்கு அதிகாரிபட்டி பேருந்து நிறுத்தம் அருகே கைது செய்துள்ளார் என்றும், எதிரி ராபின் என்பவரை 25.09.2023ம் தேதி காலை 08.00 மணிக்கு வங்கமனூத்து சர்ச் அருகே கைது செய்தும், எதிரி முத்து முருகேசன் என்பவரை 06.12.2023ம் தேதி காலை 07.30 மணிக்கு குடுமியான்மலை, எதிரியின் வீட்டின் அருகே கைது செய்தும், மேற்படி எதிரிகளை தக்க வழிக்காவல் மூலமாக நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார் என்றும், வழக்குச் சொத்துக்களை அ.சா.ஆ.15 முதல் அ.சா.ஆ.18 வரையுள்ள நான்கு படிவம் – 91 களின் மூலமாக தனித்தனியே நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

vi) சம்பவத்தில் காயம்பட்ட அ.சா.1க்கு சிகிச்சை அளித்த திண்டுக்கல் அரசு மருத்துவமனை மருத்துவர் திரு. திலீப்குமார் என்பவரையும், திருச்சி தனியார் மருத்துவமனை மருத்துவர் திரு. பாபு என்பவரையும் தனித்தனியாக விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்து அ.சா.ஆ.19, அ.சா.ஆ.20 மருத்துவச் சான்றிதழ்களைப் பெற்றுள்ளார் என்றும், மேற்படி ஆய்வாளர் அவர்கள் இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளான 392, 397, 323, 506(ii) இ.த.ச.வினை, சட்டப்பிரிவுகள் 392, 397, 323, 506(ii) r/w 34, 120(b) இ.த.ச.வாக மாறுதல் செய்து, அ.சா.ஆ.21 சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்துள்ளார் என்றும், ஆய்வாளர் அவர்கள் வாதியிடம் புகார் மனுவைப் பெற்று வழக்கு பதிவு செய்த உதவி ஆய்வாளர் திரு. ராஜேந்திரன் மற்றும் வழக்கின் சாட்சிகளை விசாரணை செய்து, அவருடைய புலன் விசாரணையை முடித்துக் கொண்டு வழக்கின் எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 392, 397, 323, 506(ii) r/w 34, 120(b)

இ.த.ச.வின் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். இத்துடன் அரசுதரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

6. இந்த வழக்கில் அரசுத் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து இந்த எதிரிகளுக்குப் பாதகமாகத் தோன்றிய சங்கதிகளை குறித்து எதிரிகளிடம் பிரிவு 351 BNSS–ன் கீழ் விசாரணை செய்தபோது, எதிரிகள் அரசுத்தரப்பு சாட்சிகள் கூறுவது பொய் என்றும், பொய் வழக்குப் போடப்பட்டுள்ளதாகவும், தங்களது தரப்பில் சாட்சிகள் இல்லை என்றும் கூறியுள்ளார்கள். எதிரிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படாததால், விசாரணை முடிக்கப்பட்டுள்ளது.

7. தற்போது இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை என்னவென்றால், இவ்வழக்கில் அரசு தரப்பில் எதிரிகள் மீதான குற்றச் சாட்டுக்கள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதேயாகும்.

**தீர்வு:–**

8. அரசுதரப்பு வழக்கின் வாதி திருச்சி மாவட்டம் துவரங்குறிச்சியில் உள்ள பொன்னம்பட்டி பேரூராட்சியில் 12வது வார்டு கவுன்சிலராகவும், தி.மு.க.வில் இளைஞர் அணி அமைப்பாளராகவும் உள்ளார். 1வது எதிரியான முத்துமுருகேசன் என்பவருடன் பழக்கம் ஏற்படுத்திக் கொண்டுள்ளார். 2வது எதிரி பெண்களை மற்ற நபர்களிடம் ஆசை வார்த்தைகள் கூறி பேச வைத்து அவர்களிடம் பணம் பறித்து வந்துள்ளார். அவ்வாறு 2வது எதிரி, 1வது எதிரியுடன் சேர்ந்து கொண்டு, திட்டமிட்டு 1வது எதிரிக்கு தெரிந்த வாதியிடம் பெண் ஆசை காட்டி பணம் பறிக்கும் நோக்கத்துடன் 3வது எதிரி சுஜாதா என்பவர் மூலம் வாதியிடம் பெண் ஆசை காட்டியும், அவரது வாட்ஸ் ஆப் எண் மற்றும் கைபேசி எண் மூலம் ஆசை வார்த்தைகள் கூறி பேசி வந்துள்ளார் என்றும், 2வது எதிரி

சம்பவ இடத்திற்கு கிழக்கு பக்கம் உள்ள ஒரு பூட்டிய வீட்டை போட்டோ எடுத்து 3வது எதிரிக்கு அனுப்பியும், அதை வாதிக்கு 3வது எதிரி அனுப்பி வைத்தும், மேற்படி தனியாக இருக்கும் அந்த வீட்டிற்கு வந்தால் உல்லாசமாக இருக்கலாம் என்று ஆசை வார்த்தைகள் கூறி 1வது, 2வது எதிரிகளின் திட்டப்படி வாதியை சம்பவ இடத்திற்கு வர வைத்துள்ளார்கள் என்றும், அதன்படி கடந்த 17.08.2023ம் தேதி 21.00 மணிக்கு வாதியும், அவரது உறவினர் செல்லப் பாண்டியும் வாதிக்கு சொந்தமான TN 67 B 2394 Santro என்ற பதிவெண் கொண்ட காரில் சம்பவ இடத்திற்கு வந்தபோது, ஏற்கனவே அங்கு தயாராக இருந்த 4வது எதிரிக்குச் சொந்தமான TN 57 BE 775 Bajaj Pulsur என்ற வாகனத்திலும், 2வது எதிரி ஓட்டி வந்த TN 20 CA 1337 Pulsur என்ற பதிவெண் கொண்ட வாகனத்திலும், சட்டத்திற்கு முரணான இளஞ்சிறார் சிபி (எ) அந்தோணி ஆகியோர் மூன்று இருசக்கர வாகனங்களுடன் மறைந்திருந்தும், 2வது எதிரி வடிவேல் மற்றும் அவரது கூட்டாளிகளான 4, 5, 6, 7, 8 ஆகிய எதிரிகள் மற்றும் சட்டத்திற்கு முரணான இளஞ்சிறார் ஆகியோர் வாதி மற்றும் அவருடன் வந்திருந்த வாதியின் உறவினரான செல்லப்பாண்டி என்பவரும் வந்திருந்த காரின் அருகே சென்று அவர்களில் 2, 4, 7, 5 எதிரிகள் காருக்குள் ஏறி 4, 5 எதிரிகள் இடுப்பில் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து வாதியின் கழுத்தில் வைத்து சத்தம் போட்டால் கொன்று விடுவோம் என மிரட்டியும், 2வது எதிரி, வாதியின் சட்டைப் பாக்கெட்டில் இருந்து Vivo செல்போன் மற்றும் பணம் ரூ.15,000/- ஆகியவற்றை பறித்துக் கொண்டும், 7வது எதிரி செல்லப்பாண்டியின் பாக்கெட்டில் இருந்த Vivo செல்போன் மற்றும் பணம் ரூ.500/- ஆகியவற்றை பறித்துக் கொண்டுள்ளார்.

8.1) எதிரிகள் தங்களிடம் வழிப்பறி செய்வதை தெரிந்து கொண்டு அவர்களை தடுக்க முயன்ற வாதியை 5வது எதிரி கத்தியால் குத்தியபோது, வாதிக்கு வலது உள்ளங்கையில் இரத்தக் காயம் ஏற்பட்டுள்ளது. பின்பு வாதியையும், செல்லப்

பாண்டியையும் அவர்கள் வந்த காரிலேயே ஏற்றிக் கொண்டு 4வது எதிரி காரை ஓட்டிக் கொண்டு காம்பார்பட்டிக்கு கிழக்கு பக்கம் உள்ள ஒரு இருட்டான மாந்தோப்பிற்குள் கூட்டிச் சென்றுள்ளார்கள் என்றும், மற்ற எதிரிகளான 6, 8வது எதிரிகள் இருசக்கர வாகனத்திலும், சட்டத்திற்கு முரணான இளஞ்சிறார் அவர் எடுத்து வந்த இருசக்கர வாகனத்தை அவர் எடுத்த இடத்திலேயே வைத்துவிட்டு எதிரிகள், வாதியை வைத்திருந்த இடத்திற்கு சென்றும், அந்த இருட்டான பகுதியில் வைத்து வாதியை அனைவரும் கையால் அறைந்தும், கத்தியை காண்பித்து ஒழுங்கு மரியாதையாக உனக்கு தெரிந்தவர்களிடம் பணம் கொண்டு வரச் சொல். இல்லை என்றால் உங்களை இங்கேயே கொன்று விடுவோம் என கொலை மிரட்டல் விடுத்துள்ளார்கள் என்றும் அ.சா.1 கொடுத்த புகாரின் அடிப்படையில் சாணார்பட்டி காவல் நிலைய போலீசாரால், எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்து, விசாரணை மேற்கொள்ளப்பட்டு இ.த.ச பிரிவுகள் 392, 397, 323, 506(2), 120(பி), உ/இ. 34ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் சொல்லப்பட்டுள்ளது.

9. அரசுத் தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.21 வரையிலான சான்றாவணங்களும், சான்று பொருளாக சா.பொ.1 முதல் சா.பொ.7 வரையிலான சான்று பொருட்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிரிகள் தரப்பில் சாட்சிகள் இல்லை மற்றும் சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

10. இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. அரசு தரப்பில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்கள் முறையாக நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்று பரிசீலிக்கையில், இந்த வழக்கில் சம்பவத்தைப் பற்றியும், தனக்கு ஏற்பட்ட காயத்தை பற்றியும் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தது பற்றியும், மற்ற விபரங்கள் பற்றியும் கூறும் சாட்சியாக அ.சா.1

விசாரிக்கப்பட்டுள்ளார். சம்பவத்தின்போது உடனிருந்தது பற்றியும், பிற விபரங்கள் பற்றியும் கூறும் சாட்சியாக அ.சா.2ம், அ.சா.3 காவல் ஆய்வாளர், கூடுதல் சாட்சியாக விசாரிக்கப்பட்டு, ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளித்துள்ளார்.

11. இந்த வழக்கு சம்பவத்தில் பாதிக்கப்பட்ட நபரும், புகார்தாருமான அ.சா.1 மற்றும் சம்பவத்தின்போது உடனிருந்த சாட்சியான அ.சா.2 ஆகியோரின் சாட்சியங்கள் இந்த வழக்கிற்கு மிக முக்கியமான சாட்சியங்களாகும். அவர்களது சாட்சியங்களை பரிசீலனை செய்கையில், அ.சா.1 தன் சாட்சியத்தில், ஆஜர் எதிரிகளைத் தெரியாது என்றும், தன்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் மற்றும் கைரேகை தன்னுடையது தான் என்றும், அதை சாணார்பட்டி காவல் நிலையத்தில் வைத்து செய்ததாகவும், 17.08.2023-ம் தேதி இரவு சுமார் 10.00 மணிக்கு மேல் தனக்கு அலைபேசி மூலமாக ஒரு அழைப்பு வந்ததாகவும், ஒரு பெண்மணி தங்களை விருந்திற்கு அதிகாரிப்பட்டிக்கு வரச்சொல்லி அழைப்பு வந்ததாகவும், அன்று சேர்மேனுக்கு பிறந்தநாள் என்பதால், தெரிந்தவர்கள்தான் விருந்திற்கு அழைக்கிறார்கள் என்று கருதி, தானும், தனது உறவினர் செல்லப்பாண்டியும் போனபோது, இயற்கை உபாதைக்காக சிலுவத்தூருக்கு முன்பாக ஒரு வீட்டின் அருகே காரை நிறுத்திவிட்டு இறங்கியபோது, அங்கு சுமார் 7, 8 பேர் பைக்கில் திடுதிடுவென்று வந்து, கத்தியைக் காட்டி மிரட்டி பக்கத்தில் இருந்த மாந்தோப்பிற்கு அழைத்துச் சென்றார்கள் என்றும், தங்களிடம் இருந்த பணம், செல்போன் ஆகியவற்றை எடுத்துக் கொண்டு, தங்கள் இருவரையும் பிரித்து வெவ்வேறு இடங்களுக்கு கொண்டு சென்றார்கள் என்றும், தன்னை மிரட்டிக் கொண்டு இருந்த நபரிடம் இருந்த கத்தியை தான் பிடுங்கி அருகில் இருந்த ஊருக்குள் ஓடிவிட்டதாகவும் கூறியுள்ளார். அ.சா.2ம் அ.சா.1ன் சாட்சியத்தை அனுசரித்து சாட்சியம் அளித்துள்ளார். சம்பவம் நடந்து 1 வாரம் கழித்து தான் புகார் மனு

கொடுக்கப்பட்டது என அ.சா.1 தனது சாட்சியத்தில் சொல்லியுள்ளார். எனவே, புகார் மனுவின் உண்மைத் தன்மை சந்தேகத்திற்குரியதாகவே உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

12. மேற்படி இருவரின் சாட்சியங்களை பரிசீலனை செய்கையில், எதிரிகளைத் தெரியாது என்றும், சுமார் 7, 8 நபர்கள் கத்தியைக் காட்டி மிரட்டி தங்களிடமிருந்து பணம், செல்போன் ஆகியவற்றை பறித்துக் கொண்டார்கள் என்று கூறியுள்ள நிலையில், எதிரிகள்தான் வழக்கு குற்ற சம்பவத்தில் ஈடுபட்டார்கள் என்பது குறித்து அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோரின் சாட்சியங்கள் அமையவில்லை. அ.சா.3 இவ்வழக்கினை புலன் விசாரணை செய்து எதிரிகள் மீது முகாந்திர வழக்கு உள்ளது என்பதால், அவர் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்தது குறித்து சாட்சியம் அளித்துள்ளார்.

13. அரசு தரப்பு வழக்கினை நிரூபிக்கும் அளவிற்கு அ.சா.1, அ.சா.2 ஆகியோரின் சாட்சியம் அமையாத நிலையில், எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச் சாட்டுக்களைப் பொறுத்து, அதை அவர்கள் தான் செய்தார்களா என்பதை புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தை மட்டும் வைத்து முடிவு செய்துவிடலாகாது. அரசு தரப்பில் எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச் சாட்டுக்கள் தகுந்த மற்றும் நீதிமன்றம் ஏற்கும் படியான சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை முன்னிலைப்படுத்தி, நியாயமான சந்தேகங்களுங்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யவில்லை என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது. அ.சா.3 புலன் விசாரணை அதிகாரி அவர் தனது அரசு பணியைச் செய்யும் போது, சொல்லப்பட்ட ஒன்றாகவே கருத இயலும். எனவே, எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச் சாட்டுக்கள் குறித்து அரசு தரப்பில் போதிய சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்யப்படாததால், சந்தேகத்தின் பலனை

எதிரிகளுக்கு சாதகமாக்கி தீர்ப்பு அளிப்பது தான் நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

14. இறுதியாக மேலே விவரிக்கப்பட்டுள்ள காரணங்களின் அடிப்படையில் வழக்கை பரிசீலிக்கின்றபோது, அரசு தரப்பில் 1 முதல் 8 எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 392, 397, 323, 506(2), 120(பி), உ/இ. 34–ன் கீழான குற்றச்சாட்டுக்கள் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் ஐயத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என தீர்மானித்து, சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி, எதிரிகளை மேற்படி பிரிவுகளின் கீழான குற்றச் சாட்டுக்களுக்கு குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து, எதிரிகளை பிரிவு கு.வி.மு.ச பிரிவு 235(1)–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.

15. இந்த வழக்கில், இந்நீதிமன்ற R.P.R. No. 07/2026–ல் கைப்பற்றப்பட்ட சா.பொ.2 சுமார் 34 செ.மீ. நீளமுள்ள மரக்கைபிடி மற்றும் இரும்பு பூனுடன் கூடிய சூரிக்கத்தி ஒன்று, சா.பொ.6 சுமார் 30.8 செ.மீ நீளமுள்ள மரக்கைப்பிடியுடன் கூடிய கத்தி ஒன்று ஆகியவற்றை மேல்முறையீட்டு காலத்திற்குப் பின்னர் அழிக்க உத்தரவிடப்படுகிறது.

16. சா.பொ.3 லைட் புளூ கலர் Vivo cell phone ஒன்று, சா.பொ.4 ஆரஞ்சு நிற Vivo Cell phone ஒன்று, சா.பொ.7 லைட் புளூ கலர் Redmi செல்போன் ஒன்று மற்றும் குறியீடு செய்யப்படாத வெளிர் பச்சைக் கலர் Samsung செல்போன் ஒன்று ஆகியவற்றை அதன் உரிமையாளர் மேல் முறையீட்டு காலத்திற்குப் பின்னர் நீதிமன்றத்தில் உரிய மனு தாக்கல் செய்து பெற்றுக் கொள்ளலாம் என்றும் உத்தரவிடப்படுகிறது. சா.பொ.1 மற்றும் சா.பொ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள இருசக்கர வாகனங்களின் புகைப்படங்களை வழக்கு கோப்பில் வைக்க உத்தரவிடப்படுகிறது.

17. இவ்வழக்கில் கைப்பற்றப்பட்டு சாணார்பட்டி காவல்நிலைய பொறுப்பில் வைக்கப்பட்டுள்ள TN 57 BE 7755 Bajaj Pulsar இருசக்கர வாகனம், TN 20 CA 1337 Pulsar என்ற இருசக்கர வாகனம் ஆகியவற்றை அதன் உரிமையாளர் மேல் முறையீட்டு காலத்திற்குப் பின்னர் நீதிமன்றத்தில் உரிய மனு தாக்கல் செய்து பெற்றுக் கொள்ளலாம் என்றும் உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் பிழைகள் நீக்கப்பட்டு, இன்று 2026–ம் வருடம் ஏப்ரல் மாதம் 09–ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

V DEEPA Digitally signed by V DEEPA Date: 2026.04.09 17:46:36 +0530

உதவி அமர்வு நீதிபதி,
(தலைமை நீதித்துறை நடுவர்)
திண்டுக்கல்.

**அரசுத் தரப்புச் சாட்சிகள்:–**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு. வேலுமணி |
| அ.சா.2 | திரு. செல்லப்பாண்டி |
| அ.சா.3 | திரு. பிரபாகரன், காவல் ஆய்வாளர் |

**அரசுத் தரப்புச் சான்றாவணங்கள்:–**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 24.08.2023 | தேதியிட்ட புகார் மனுவிலுள்ள அ.சா.1ன் கையொப்பம் மட்டும். |
| அ.சா.ஆ.2 | 24.08.2023 | தேதியிட்ட புகார் மனுவிலுள்ள அ.சா.2ன் கையொப்பம் மட்டும். |
| அ.சா.ஆ.3 | 24.08.2023 | தேதியிட்ட புகார் மனு |
| அ.சா.ஆ.4 | 24.08.2023 | தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.5 | 24.08.2023 | தேதியிட்ட பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.6 | 24.08.2023 | தேதியிட்ட மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.7 | 24.08.2023 | தேதியிட்ட 4வது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்கு மூலத்திலுள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி மட்டும். |

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.8 | 24.08.2023 | தேதியிட்ட கைப்பற்றுதல் மகஜர் |
| அ.சா.ஆ.9 | 07.10.2023 | தேதியிட்ட 2வது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்கு மூலத்திலுள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி மட்டும். |
| அ.சா.ஆ.10 | 07.10.2023 | தேதியிட்ட கைப்பற்றுதல் மகஜர் |
| அ.சா.ஆ.11 | 01.12.023 | தேதியிட்ட 5வது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்கு மூலத்திலுள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி மட்டும். |
| அ.சா.ஆ.12 | 01.12.2023 | தேதியிட்ட கைப்பற்றுதல் மகஜர் |
| அ.சா.ஆ.13 | 06.12.2023 | தேதியிட்ட 1வது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்கு மூலத்திலுள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி மட்டும். |
| அ.சா.ஆ.14 | 06.12.2023 | தேதியிட்ட கைப்பற்றுதல் மகஜர் |
| அ.சா.ஆ.15 | 24.08.2023 | தேதியிட்ட படிவம் 91 |
| அ.சா.ஆ.16 | 07.10.2023 | தேதியிட்ட படிவம் 91 |
| அ.சா.ஆ.17 | 01.12.2023 | தேதியிட்ட படிவம் 91 |
| அ.சா.ஆ.18 | 06.12.2023 | தேதியிட்ட படிவம் 91 |
| அ.சா.ஆ.19 | 17.08.2023 | தேதியிட்ட துவங்குறிச்சி D.C மருத்துவமனையில் வழங்கிய மருத்துவ சான்று |
| அ.சா.ஆ.20 | 22.08.2023 | தேதியிட்ட சிலுவத்தூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் வழங்கிய மருத்துவ சான்று |
| அ.சா.ஆ.21 | 06.02.2024 | தேதியிட்ட சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை |

**<u>அரசுதரப்பு சான்று பொருள் :</u>**

| | |
|---|---|
| சா.பொ.1 | வழக்கு சொத்துள்ள புகைப்படங்கள் (இருசக்கர வாகனம்) |
| சா.பொ.2 | சுமார் 34 செ.மீ. நீளமுள்ள மரக்கைபிடி மற்றும் இரும்பு பூனுடன் கூடிய சூரிக்கத்தி ஒன்று, |
| சா.பொ.3 | லைட் புளு கலர் Vivo cell phone ஒன்று, |
| சா.பொ.4 | ஆரஞ்சு நிற Vivo Cell phone ஒன்று, |
| சா.பொ.5 | வழக்கு சொத்துள்ள புகைப்படங்கள் (இருசக்கர வாகனம்) |
| சா.பொ.6 | சுமார் 30.8 செ.மீ நீளமுள்ள மரக்கைப்பிடியுடன் கூடிய கத்தி ஒன்று |
| சா.பொ.7 | சா.பொ.7 லைட் புளு கலர் Redmi செல்போன் ஒன்று |

**<u>எதிரிகள் தரப்பு சாட்சிகள் மற்றும், சான்றாவணம் :</u>** இல்லை

**<u>எதிரிகள் தரப்பு சான்று பொருள் :</u>** இல்லை

**<u>குறிப்பு:–</u>**

1. இந்த வழக்கில் எந்த சாட்சியும் மூன்று முறைக்கு மேல் விசாரணைக்கு அழைக்கப்படவில்லை.
2. இவ்வழக்கின் முடிவு குறித்து இரு தரப்பினருக்கும் தெரிவிக்கப்பட்டது.
3. சொத்து பற்றிய உத்தரவு உரிய பதிவேட்டில் பதிய உத்தரவிடப்பட்டது.

V DEEPA Digitally signed by V DEEPA Date: 2026.04.09 17:46:25 +0530

உதவி அமர்வு நீதிபதி,
(தலைமை நீதித்துறை நடுவர்)
திண்டுக்கல்.